2012 மே 4]

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் திரு. ஞா. செந்தமிழன் அவர்கள்.*

***திரு. ஞா. செந்தமிழன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம் நித்தம் நான் போற்றி வணங்குகின்ற எங்களுடைய இதய தெய்வம், கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், வறுமையை ஒழிப்பதையே வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டு, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்து, ஏற்றம் பெற்ற மக்கள் வாழ்வு வளம் பெற, வளம் பெற்ற மக்களின் சந்ததிகளின் வாழ்வு வளம் பெற திட்டங்கள் தந்து செயல்படுத்தும் இந்திய மக்களின் எதிர்பார்ப்பு, நாளைய பாரதத்தின் நல்வழிகாட்டி, நான்காம் தமிழாம் அறிவியல் தமிழ் கண்ட ஜகத்தின் மகத்தான முதல்வர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியினைக் காணிக்கையாக்கி பணிந்து வணங்கி, 2011-2012 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 1-வது மற்றும் 2-வது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தெய்வம் மனுஷ்ய ரூபேன" என்ற புனித வரிகளுக்கேற்ப, தமிழக மக்களுடைய நலன் பேணிக் காக்கின்ற வகையில் பூமாதேவியினுடைய வடிவிலே இன்றைக்கு தமிழக மக்களுடைய நலன் காத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கி, 2011-2012 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 17 முதல் 34 வரையிலான 18 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளித்து அமர்கின்றேன்.*